**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி,**

**மன்னார்குடி**

# O.S. No. 122/2015

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ம் நாள் வாதி தரப்பு 3 வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின்ஏற்பாட்டின்படி திரு .A.S.அமீர்தீன், B.A.,B.L.,LLM,D.J.J.J.Psy, மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ) அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**<u>நாள் 17.11.2022</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழரசன்- கிராம நிர்வாக அலுவலர் | ஜாதி | : | |
| த /பெயர் | : | காத்தமுத்து | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

<u>வா .சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை</u>

**1.** நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் 3 வது சாட்சியாவேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழை ப்பாணை வந்தது, அதன் அடிப்படையில் சாட்சியம் சொல்லவந்தேன்.

**2.** நான் பாளையக்கோட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக சுமார் ஒன்றரை வருடங்களாக இருந்து வருகிறேன். மேற்படி கிராமத்தில் கிராம சம்மந்தமான விபரங்கள் அதன் தொடர்பான விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அதன் சம்மந்தமான ஆவணங்கள் வைத்துள்ளேன்.

**3.** "அ" பதிவேடு கொண்டுவந்துள்ளேனா என்றால் ஆம் கொண்டு வந்துள்ளேன். புல எண். 458/2-ஆனது என்ன வகைப்பாட்டில் உள்ளது என்றால் புஞ்சை வகைப்பாட்டில் உள்ளது. அதன் விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் 3 ஏர்ஸ் ஆகும். புல எண். 458/3-ல் விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் 16 ஏர்ஸ் ஆகும். அது புஞ்சை வகை ஆகும். மேற்படி இரு புல எண்களுக்கம யார் பெயரில் பட்டா உள்ளது என்று சொன்னால் வீரப்பன் என்பவரது பெயரில் உள்ளது.

**4.** மேற்படி இரண்டு புல எண்களிலும் உள்ள இடத்தை நான்பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். மேற்படி இரண்டு புல எண்களிலும் , என்ன பயிரிடப்பட்டுள்ளது என்றால் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. அது காய்க்கும் தன்மையில் உள்ளது. குட்டை தன்மை உள்ளது. தென்னையின் வயது சுமார் 7 வயதிற்கு மேற்பட்டது என்று நான் கனித்தேன். மேற்படி தென்னை பயிரை யார் பயிரிட்டார் என்று நான் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் ஆம் தெரிந்து கொண்டேன் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருக்கும் சுப்பிரமணியன் தான் பயிரிட்டுள்ளார் .

**5.** மேற்படி இரு புல எண்களுக்கும் வரி யார் செலுத்தி வருகிறார் என்றால் இ ந்த சுப்பிரமணியன்தான் செலுத்தி வருகிறார். மேற்படி இரு புல எண்களிலும் உள்ள சொத்துக்கள் யார் அனுபவத்தில் உள்ளது என்றால் சுப்பிரமணியனின் அனுபவத்தில் தான் உள்ளது . என்னிடம்

காட்டப்படும் தாவா சொத்துக்களுக்கான அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் ***Ex.X1*** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்கிறார்.**

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. மேற்படி இரு புல எண்களும் 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். அவர் பெயர்தான் வீரப்பன். நான் 2021ம் வருடம் 9 வது மாதம் தான் கிராம நிர்வாக அலுவலராக தாவா கிராமத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். நான் மேற்படி கிராமத்திற்கு வருவதற்கு முன்தைய தாவா சங்கதிகள் அனைத்தும் ஆவணங்களின் அடிப்படையில்தான் தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்பு நான் மேற்படி கிராமத்தில் நான் பணியாற்றவில்லை என்றால் சரிதான்.

2. என்னுடைய வருவாய்த்துறை ஆவணங்களான அடங்கல், சிட்டா, அ பதிவேடு ஆகிய ஆவணங்களில் இந்த சுப்ரமணியன்தான் சாகுபடி செய்கிறார் என்ற குறிப்புகள் உள்ளதா என்றால் இல்லை. ஆவணங்களில் அடிப்படையில் நான் தாவா கிராமத்திற்கு பணிக்கு வருவதற்கு முன்பு வரை உள்ள காலக்கட்டங்களில் தாவாபுல எண்ணிற்கு யார் அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் பாலகிருஷ்ணன், தமிழ்செல்வனின் தந்தை வீரப்பன் பெயரில்தான் உள்ளது.

3. மேற்படி என்னால்குறியீடு செய்யப்பட்ட Ex.X1 ஆன ஆவணம் 20.04.2021-ல் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் 9 வது மாதம் பணிக்கு வந்திருந்த சூழநிலையில் இந்த ஆவணம் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. ஒரு நபர் ஒரு சொத்தில் அனுபவத்தில் இருக்கிறாரா என்பதை அருகிலுள்ள நபர்களை எழுத்துமூலமாக வாக்குமூலமாக பெற்று அதன் அடிப்படையில் தான் உறுதிசெய்யப்படும் என்று சொன்னால் சரிதான்.

4. தாவா புல எண்ணிற்கு அவ்வாறு எதுவும் நான் எதுவும் விசாரித்து வாக்குமூலம் பெற்றேனா என்றால் நான் வாய்மொழியாக விசாரித்தேன். நான் அவ்வாறு விசாரணை செய்யும் போது அதற்கான குறிப்புகளை பதிவேடுகளில் எழுதுவது வழக்கம் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு தாவா சொத்துக்களக்கு நான் எதுவும் குறிப்புகள் எழுதினேனா என்றால் இல்லை. அதனால் எந்த தேதியில் எந்த மாதத்தில் என்ன நேரத்தில் தாவா சொத்தை பார்த்தேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான்.

5. சுப்பிரமணியன் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் உண்மை விபரங்களை மறைத்து அவருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்றால் சரியல்ல. சுப்ரமணியன் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவரது தகாத செல்வாக்கினால் மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct
(Sd/- A.S. Ameerdheen)
District Munsif
Mannargudi.